1978 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இது எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதைப்பற்றி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் என் சார்பில் பதில் சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : Equal Remuneration Ordinance of 1975 என்ற ஒன்று இருந்தது. அதையொட்டி 1976-ல் சட்டம் வந்திருக்கிறது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரேமாதிரியான கூலி கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. எங்காவது இது விடப்பட்டு போயிருந்தால், அதைப்பற்றி தெரிவித்தால், அதை அங்கு செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரசாங்கமே நடத்துகிற விவசாயப் பண்ணைகளில் இவ்விதமான பாகுபாடு இருக்கிறது, ஆண்களுக்கு ஒரு சம்பளமும், பெண்களுக்கு ஒரு சம்பளமும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையை இப்படிப்பட்ட விவசாயப்பண்ணைகளில் மாற்றி ஒரே மாதிரியான சம்பளம் கொடுக்கின்ற வகையில் அரசாங்கமே முன் உதாரணமாக இருந்து எடுத்துக்காட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The HON. THIRU S. RAGHAVANANDAM : Equal Remuneration Act is equal to one and all.

நெல்லை மாவட்டத்தில் அணுமின் நிலையம்.

*264 வினா— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், இடிந்தகரை அருகே கடல் பகுதியில் அணுமின் நிலையம் அமைப்பது சம்பந்தமாக மத்திய அரசு பரிசீலனை செய்ததை இந்த அரசு அறியுமா ?

(ஆ) ஆம் என்றால், அத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தென் மண்டலத்தில் புதியதொரு அணுமின்நிலையம் அமைப்பதற்கு மத்திய அணுமின்நிலைய இடத்தேர்வு குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு இடங்களில், இடிந்தகரைக்கு அருகிலுள்ள குந்தன்குளமும் ஒன்று. இவ்விடங்கள் பற்றிய விவர அறிக்கை மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.